# அறன்வழி அகத்தூய்மையுடன் நன்கொடை நல்கல்





17.01.2013



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்பும் அறனும் உடைத்தாயின்
இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்கொடை நல்கல்

**"நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு"**

என்ற வள்ளுவரின் வாக்கிற்கமைய இம்மனையில் நடமாடும் தெய்வங்களாக இல்லறம் நடாத்தி எமக்கு வழிகாட்டியாக இருந்து, மறைந்தும் ஆத்ம சொருப நிழலாக இன்றுவரைக்கும் எம்மை வழி நடத்திச் செல்லும் எங்கள் ஆருயிர்த் தந்தை பண்டிதர் சின்னத்தம்பி வேலுப்பிள்ளை, ஆருயிர் அன்னை வேலுப்பிள்ளை தவமணி இருவரின் நினைவாக அவர்களின் மருமகன் நடராஜா சந்திரராஜா மகள் சந்திரரஜா விமலேஸ்வரி குடும்பமும் மகன் வேலுப்பிள்ளை ஞானேஸ்வரன், மருமகள் ஞானேஸ்வரன் இராஜகுமாரி குடும்பமும் இணைந்து

**"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்"**

என்ற வள்ளுவப் பெருந்தகையின் அறன் வலியுறுத்தல் குறளுக்கமைய ஆழ்மன மகிழ்ச்சியுடனும், இதயசுத்தியுடனும் அவர்கள் இல்லறம் நடத்திய மனையுடன் கூடிய நிலப்பரப்பை மானுடகுலத்தின் அனைத்து வள மேம்பாட்டிற்கும் திறவு கோலான கல்விக்கூடம் அமைவதற்கு இத்திறவுகோலை சான்றோர் முன்னிலையிலும், கல்விசார் சமூகம் முன்னி லையிலும் வழங்கி நன்கொடையைக் கையளிப்பதில் பெருமிதம் அடைகின்றோம்.

நன்றி

**திரு.திருமதி.சந்திரராஜா குடும்பம்**
**திரு.திருமதி ஞானேஸ்வரன் குடும்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோற்றம்
19 - 09 - 1919

மறைவு
19 - 03 - 1998

அமரர்

## உயர்திரு பண்டிதர் சி.வேலுப்பிள்ளை

(ஓய்வு பெற்ற ஆசிரியர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி 1945 - 1977)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி முன்னைநாள் அதிபரின் உள்ளத்தில் இருந்து...

**நெருநலு ளலொருவன் இன்றிலையெனினும்
பெருமை படைத்திற்று இவ்வுலகு.**

ஈரடியால் உலகை அளந்த வள்ளுவன் வாய்மொழியை இன்று உடுப்பிட்டியில் காண்கிறேன்.

ஆம்... நேற்றுவரை எங்களுடன் கூடிக்குலாவி... கம்பீரமாய் நடமாடிய அந்த மாமனிதன் இன்றில்லை என்பதை நினைத்துப்பார்க்கவே முடியவில்லை.

''பண்டிதர் வேலுப்பிள்ளை எம்மைவிட்டுப் பிரிந்து விட்டாரா?''

மூன்று தலைமுறை மாணவர்களை தன்னகத்தே கொண்டு இன்றும் எமக்கினிய ஆசானாக... நல்லதோர் வழிகாட்டியாக... தமிழ் கற்றறிந்த பண்டிதராக வலம் வந்த ஐயா அவர்கள் மண்ணுலக வாழ்வைத் துறந்து விண்ணுலகம் சென்றுவிட்டார் என்ற செய்தியை அறிந்ததும், ஒரு கணம் எம் நெஞ்சம் விம்மிப்புடைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது அவர் செய்த சேவையின் மகத்துவம்.... அந்த வகையில் அவரது மாணவர்களாக இருந்த எமக்கு ஒரு ஆறுதல்.... நல்லதோர் ஆசானாக, எம்முடன் கூட இருந்தே நல்வழிகாட்டிவந்த அந்தமாமனிதன்!

யார் அந்த பண்டிதர் வேலுப்பிள்ளை?.... எமக்கெல்லாம் தெரிந்த அந்த மாமனிதனை, இன்றைய புதிய தலைமுறை தெரிந்திருக்க நியாயமில்லை.

ஆம், ஈழமண் பெற்றெடுதத் தவப்புதல்வன்... பண்டிதர் வேலுப்பிள்ளையின் வரலாறு எமக்கு பல அநுபவங்களைத்தரும்.

இலங்கைத் தீவின் வடமாகாண யாழ்ப்பாண மாவட்டத்தில் பேரூர் வல்வெட்டி... அங்குள்ள தெல்லுளுவை என்னும் இடத்தில் சின்னத்தம்பிக்கும் வள்ளிப்பிள்ளைக்கும் ஐந்தாவது மகனாக 1919.09.19 இல் தோற்றம் பெற்றவர்... அன்று தொடக்கம் அன்னார் அமரத்துவம் அடையும் வரை அவரது வாழ்வின் அனுபவங்கள்... இன்ப துன்பங்கள் அனைத்தும் ஒரு வரலாறாக வேண்டும்.

**பண்டிதரின் வரலாற்றுச் சுவடியில்...**

1924 இல் வல்வெட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியை ஆரம்பித்தார். அன்று பயிற்றப்பட்ட ஆசிரியர் உயர்திரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைரவப்பிள்ளை சின்னத்தம்பி அவர்கள் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்தார். திரு. கந்தையா தம்பையா அவர்களும் திருமதி கிருஷ்ணர் முத்து அவர்களும் கல்வி கற்பித்தனர். இப்பாடசாலையில் அப்போது ஐந்தாம் வகுப்புவரையே கல்வி கற்பிக்கப்பட்டு வந்தது. ஐந்தாம் வகுப்பில் சித்தியடைந்த பண்டிதர் அவர்கள் இடைநிலைக் கல்வியைத் தொடரும் ஆவலில் 1929 இல் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, வல்லை சிதம்பராக் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் சென்று சில மாதங்கள் கல்வி கற்றுக் கொண்டிருந்த போது அந்தக் கல்லூரிகளின் சூழலும் நடைமுறை களும் அவருக்கு ஒத்துப்போகவில்லையோ என்னவோ மனம் குழம்பிப்போய் இருந்த பண்டிதர் தொடர்ந்து கற்பதற்கான மனநிலை அற்ற நிலையில் தனக்குள்ளே வெதும்பிக்கொண்டிருந்தார்.

இந்நிலையிலும் தன் ஊரைச் சேர்ந்த ஆசான் வேலுப்பிள்ளை அவர்களிடம் ஆங்கிலக் கல்வியைக் கற்றுவந்தார்.

‘‘வேலுப்பிள்ளை நன்றாகப் படிக்கக் கூடியவன் வீணாக குழம்பிப்போய் இருக்கிறான். அவனை என்னுடைய பாடசாலையில் ஆறாம் வகுப்பு படிக்க அனுப்புங்கள் அவனுக்காகவே புதிய வகுப்பை ஆரம்பிக்க வேண்டும்’’

அன்று வல்வெட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் தலைமையாசிரியராக இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வை. சின்னத்தம்பி அவர்கள் பண்டிதரின் தந்தையார் சின்னத்தம்பியை அணுகியபோதுதான் அவர் தன் மகனின் பெருமையையும், ஆற்றலையும் உணர்ந்து கொண்டார். அந்தத் தலைமையாசிரியரின் பணிவும் பொறுப்பும் பண்டிதரை மீண்டும் அந்தப் பாடசாலைக்கே வரவழைத்தது.

ஆம்!... அந்தப் பாடசாலையிலிருந்தே ஆறாம் ஏழாம் வகுப்புகளிலும் முதன்மையாக சித்தியடைந்து அப்பொழுது அடிப்படைத் தகைமைப் பரீட்சைக்கான வகுப்பாக இருந்த கனிஷ்ட தராதரப் பத்திர வகுப்பில் கற்கத் தொடங்கினார்.

ஒரு நிறுவனத்தின் உயிர்த்துடிப்பை அந்த நிறுவனத்தின் தலைவரின் செயற்பாட்டில் இருந்து அறிந்து கொள்ளலாம் என்பது போல் அந்தப் பாடசாலையின் தலைமையாசிரியராக இருந்த திரு. வை. சின்னத்தம்பி அவர்களின் அயராத முயற்சியால் பயிற்றப்பட்ட ஆசிரியர்களான சமரபாகுவைச் சேர்ந்த ஆர். சி. செல்லையா காங்கேசன்துறையைச் சேர்ந்த சின்னையா ஆகியோரும் புதிதாக இணைந்து கொண்டனர். அந்தப் பாடசாலையில் முதன் முதலில் நடைபெற்ற கனிஷ்ட தராதரப் பரீட்சைக்குத் தோற்றிய நால்வரில் பண்டிதர் ஐயா ஒருவரே சித்தியெய்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியைத் தொடர்ந்து கற்பதில் மீண்டும் ஒரு தேக்க நிலையை சந்திக்க வேண்டியேற்பட்டது பண்டிதர் ஐயா அவர்களின் குல தெய்வம் பொலிகண்டி முருகன் அவருக்கு துணைநின்றார். தன் தாயாருடன் பொலிகண்டி முருகனைத் தரிசிக்கச் சென்றவருக்கு குருவின் தரிசனமும் கிடைத்தது. அக்குருதான் பண்டிதர் ஐயா அவர்கள் தன் கடைசி நாட்கள் வரை நெஞ்சில் நிறுத்தி வைத்திருந்த பண்டிதர் கந்தவனம் ஆவர். கரணவாய் தாமோதர வித்தியாசாலை அதிபராக இருந்த பண்டிதர் கந்தவனம் அவர்களின் வழிகாட்டலில் தன் கல்வியை அவ்வித்தியாசாலையில் தொடர்ந்தார். அங்கு கற்றுக் கொண்டிருக்கும் பொழுதே, சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன்பே மதுரைத் தமிழ்ச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட பிரவேச பண்டிதர் பரீட்சையிலும் சித்தி பெற்றார்.

அந்தத் தேர்வைத் தொடர்ந்து சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையிலும் சித்தி பெற்று பரமேஸ்வரா ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைக்கு விண்ணப்பித்து அத்தேர்விலும் சித்தியடைந்தார். அதனைத் தொடர்ந்து அங்கு ஆசிரியர் பயிற்சிக்கான கல்வியை விருப்புடன் கற்றுவந்த பண்டிதர் ஐயா பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப் பத்திர தேர்வுக்கு முன் மதுரைத் தமிழ்ச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட பால பண்டிதர், பண்டிதர் சோதனைகளில் சிறப்புச் சித்தி பெற்றமை அவரது முயற்சியின் வெளிப்பாடாகும். அதனைத் தொடர்ந்து பயிற்றப்பட்ட ஆசிரியர் இறுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுத் தேர்விலும் இரண்டாம் வகுப்பு மேல் தரத்தில் ( 2nd class upper) சித்தி பெற்றார்.

இதுவே அப்போது அக்கலாசாலையினால் வழங்கப்படும் உயர்தரமாகும். ஒரு ஆசிரியர் தன் சேவைக்காலப் பணிகளின் மதிப்பீட்டின் பின்பே முதலாம் தர சான்றிதழைப் பெறமுடியும்.

பண்டிதர் ஐயாவும் பயிற்றப்பட்ட ஆசிரியராகச் சேர்ந்து, தன் ஆற்றலினால் ஒரு சில வருடங்களி லேயே முதலாந் தர சான்றிதழைப் பெற்று பதவி உயர்த்தப்பட்டார்.

சோதனைகளையெல்லாம் தன் சாதனைகளாக்கி வெற்றி கண்டு வந்த பண்டிதர் ஐயாவின் அறிவுத்தாகம் மேலும் மேலும் வளர்ந்து வந்தது.

இக்காலத்தில் தான் சமஸ்கிருத மொழியையும் கற்று அதிலும் பாண்டித்தியம் பெற்றார். அத்துடன் மட்டும் அவர் நின்றுவிடவில்லை. அக்காலப்பகுதியில் பொலிகண்டியில் வசித்து வந்த ஆசிரியர் திரு. திசவீரசிங்கம் அவர்களின் உதவிபெற்று ஆங்கிலமும் கற்று வடமாகாண ஆசிரியர் சங்கத்தினால் நடாத் தப்பட்ட ஆங்கிலப்பரீட்சைகளான கனிஷ்ட தராதரப் பரீட்சை, சிரேஷ்ட தராதரப் பரீட்சை, லண்டன் இடைநிலைக் கலைத் தேர்வு ( London Inter Arts) ஆகிய பரீட்சை களிலும் சித்திபெற்று பல மொழித் தேர்ச்சி வல்லுன ராகவும் திகழ்ந்தார். அக்காலத்தில் பண்டிதர் என்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழி தேர்ச்சி வல்லுநர் என்ற மரபு இருந்தது. ஆனால் ஒன்றுடன் ஒன்று தொடர்பிலா மூவேறு (தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம்) மொழித் தேர்ச்சி வல்லுநராக திகழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தனை திறமைகளையும் தன்னகத்தே கொண்டிருந்த பண்டிதர் ஐயா ஆசிரியராக தன் சேவையை ஆற்றி வந்த வேளையில் லண்டன் பி.ஏ. பரீட்சைக்குத் தோற்றுவதற்காக மேலும் ஒரு படி சென்று கற்கத் தொடங்கினார். இக்கால கட்டமே அவரது வாழ்வில் ஒரு மறக்க முடியாத சம்பவம்.... தந்தைக்கே பிரணவத்தை உபதேசித்த முருகன் நிலை, அவரது வாழ்விலும் ஏற்பட்டது.

ஆம் தனது மாணவனாக இருந்து உயர்ந்து வந்த பேராசிரியர் அழகையா துரைராசா பல்கலைக்கழக புகு முக பரீட்சைக்குத் தோற்றி சித்தியெய்தி பல்கலைக் கழகம் செல்வதற்கு இடைப்பட்ட காலத்தில் பண்டிதர் ஐயாவும் அவரிடம் உயர் கணிதம் கற்று லண்டன் க.பொ.த (உ/த) தேர்விலும் தோற்றி சித்தி பெற்றார். அக்கால கட்டத்தில் லண்டன் பி.ஏ. தேர்விற்கு தமிழ் ஒரு பாடமாக இருந்த பொழுது தமிழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவர் பொறுப்பாக இருந்தார். அவர் இளைப்பாறியதைத் தொடர்ந்து தமிழ்ப் பாடம் நிறுத்தப்பட்டது. இதனால் தமிழை ஒரு பாடமாக லண்டன் பி.ஏ. பரீட்சைக்கு ஆயத்தம் செய்த பண்டிதர் ஐயா இறுதிப் பரீட்சைக்கு தோற்ற முடியாது. உயர் கல்வியை இடைநிறுத்துவதற்குத் தள்ளப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியைக் கற்றுத் தன்னை ஒரு நல்ல ஆசானாக உயர்த்திக் கொண்ட வேளையிலும் அன்னார், தனக்கு கல்வி கற்பித்த ஆசான்களை தன் வாழ்நாள் முழுவதும் நினைவு கூர்ந்து வந்தமை அவரது குரு பக்தியைக் காட்டுகிறது.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் கற்பிக்கும் பொழுது பாடசாலை வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றினார் சக ஆசிரியர்களுடன் அன்பாக பழகுவது மட்டுமல்லாமல் குடும்ப உறவினர் போன்று நடந்து வந்தார். மாணவர்களை வழிநடத்துவதில் சிறந்து விளங்கி பாடசாலையின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றினார். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி கரப்பந்தாட்டத் துறையில் சிறந்து விளங்கு வதற்கு உறுதுணையாக இருந்தார். தன் இளமைக் காலத்தில் பருத்தித்துறை கரப்பந்தாட்ட விளையாட்டுக் கழகத்தில் அங்கத்தவராக இருந்து பெற்ற அனுபவத்தைக் கல்லூரி கைப்பந்தாட்டத் துறைப் பொறுப்பாசிரியராக இருந்தபோது வெளிப்படுத்தினார்.

கல்வித் துறையில் சேவையாற்றிக் கொண்டி ருக்கும் போது 1944ல் மணவாழ்க்கையில் தன்னை இணைத்துக் கொண்டார். தன் வாழ்க்கைத் துணையாக உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்த உறவு முறையான கணபதிப்பிள்ளை மாணிக்கம் தம்பதிகளின் ஏக புத்திரியான தவமணியை பெற்றோரின் ஆசியுடன் மணம் முடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது மணவாழ்க்கையில் 1947 அக்டோபர்28 தவனேஸ்வரனையும், 1950-10- 17 இல் தங்கேஸ்வரன், 1953-03-15 இல் இராசகுலேஸ்வரி. 1956-07-27 இல் விமலேஸ்வரி, 1961- 02-02 இல் ஜெகதீஸ்வரி. 1963-03-26 இல் தனேஸ்வரன், 1965-01-06 இல் ஞானேஸ்வரன் ஆகிய புத்திரபாக்கியங்களை அடையும் பேறு பெற்று குடும்ப வாழ்க்கையை இனிதே நடாத்தி வந்த பண்டிதர் ஐயா தன் கல்விச் செல்வத்தை மேம்படுத்தியதோடு நில்லாமல் பொருட்செல்வத்தையும் மேம்படுத்தும் நோக்கில் பல தொழில்களிலும் ஈடுபட்டு வந்தார்.

மறைந்த பண்டிதர் வேலுப்பிள்ளை அவர்கள் தானுண்டு தன் வேலையுண்டு என்றில்லாமல் பல சமூகப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

தான் மணவாழ்க்கையில் புகுந்த ஊரில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் கண்ணகி அம்பாளை தன் குல தெய்வமாகக் கொண்டார். ஒரு காலத்தில் பேருடனும் புகழுடனும் விளங்கிய கண்ணகி அம்பாள் ஆலயம் ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபதுகளின் நடுப்பகுதியில் நலிவுற்றபோது ஊர் மக்களின் வேண்டுகோளை ஏற்று நிர்வாகத் தலைமையைப் பொறுப்பேற்று ஊரவரின் உதவியுடன் புதுப்பொலிவுறச் செய்தார். சைவ ஆகம முறைப்படி ஒரு ஆலயப் பூசையில் முதலில் விநாயகர் பூசையை முடித்துத்தான் மறு பூசைகள் தொடங்க வேண்டும் என்பதை மக்களுக்கு உணர்த்தி அதுவரை காலமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயர் விக்கிரகம் இல்லாதிருந்த கோவிலில் 1976 ஆம் ஆண்டு விநாயகர் விக்கிரகத்தை ஸ்தாபித்தார். 1984 இல் விநாயகருக்கு விமானத்துடன் கூடிய பரிவாரக் கோவிலையும் தன் பொருட்செலவிலேயே அமைத்தார். மூலஸ்தானமும் விமானத்துடன் கூடியதாக அமைக்கப்பட வேண்டு மென்று விருப்புக் கொண்டு பிள்ளையார் கும்பாபிஷே கத்தையும் பின்போட்டு வந்தார். அவர் விருப்பப்படி அம்பாளும் கருணை கூர்ந்து 1997 ஆம் ஆண்டு மூலஸ்தானமும் விமானத்துடன் அமைக்கப் பெற்று கும்பாபிஷேகம் நடந்தேறியது பிள்ளையார் கும்பாபி ஷேகத்தையும் தான் ஊரில் நிற்காவிட்டாலும் தன் பேரப்பிள்ளையைக் கொண்டு நிறைவேற்றினார்.

தன் ஊர் அயலவர்களின் இல்லங்களில் நடைபெறும் பூப்புனித நீராட்டு விழாக்கள், திருமண வைபவங்கள் மரணக் கிரியைகள் போன்றவற்றில் நடைபெறும் கிரியை களுக்கான ஆயத்த நிகழ்வுகளில் முன்னின்று நடாத்தி வைப்பதிலும் அன்னார் மகிழ்வடைந்தார்.

பண்டிதர் ஐயா, கட்டிடத் தொழில் நுட்பம், காணிகளை அளந்து பிரிவிடல் போன்றவற்றிலும் அனுபவம் பெற்றிருந்தமையால் அவ்வூரில் சாதி, மத, பேதம் இல்லாது இவை தொடர்பான உதவி கேட்டு வந்தவர்களுக்கு எந்நேரமும் சென்று உதவி செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தார். அதே போன்று ஊரில் நிலவும் குடும்பப் பிரச்சினைகள், கொடுக்கல் வாங்கல் பிரச்சினைகள், காணித்தகராறுகள் என்பவை தொடர்பாக அவரை அணுகியவர்களுக்கு இரு சாராரும் ஏற்றுக் கொள்ளக் கூடியவகையில் சமரசமாக தீர்வு வழங்குவதில் சாமர்த்தியமாகச் செயற்பட்டார்.

எதுவித சன்மானங்களோ, பிரதியுபகாரங்களோ அல்லது பாராட்டுக்களையோ விரும்பாமல் வாழ்ந்து வந்த பண்டிதர் ஐயா அவர்கள் 1998ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10. 50 மணிக்கு திருமலையில் சிவபதம் அடைந்தார்.

ஆம்...... அன்னாரின் வாழ்வும்...... பணியும்..... அந்த எடுப்பான...... கம்பீரமான தேசிய உடையிலான தோற்றமும் இன்றும் எம் கண்களில் நிழலாடுகின்றது.... அவர் என்றும் எம்முடன் வாழும் ஓர் உயிர்.!

**ந. அனந்தராஜ் B.A(Hons) SLPS CI- 1**
**உதவிக் கல்விப் பணிப்பாளர்**
**கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு**
**வடக்கு கிழக்கு மாகாணம், திருகோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோற்றம்

03 02 1927

மறைவு

02 06 2010

அமரர்

# திருமதி தவமணி வேலுப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அதிபரின் உள்ளத்திலிருந்து...

இலங்கையின் வடபுல யாழ் மாவட்டத்தில் வல்வெட்டியிலுள்ள தெல்லுளுவை எனும் கிராமத்தில் சின்னத்தம்பிக்கும் வள்ளிப்பிள்ளைக்கும் ஐந்தாவது மகனாக 1919.09.19 இல் பிறந்தவர் பண்டிதர் வேலுப்பிள்ளை அவர்கள். கல்விப் பணியிலும் சமயப் பணியிலும் பொதுப் பணிகளிலும் தனது வாழ்க்கையை பின்னிப் பிணைத்துக் கொண்டவர்.

நான் அதிபராகக் கடமையாற்றும் கல்லூரியில் ஆரம்பக் கல்வியை கற்க ஆரம்பித்த பின்னர் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் போன்ற மொழிகளைக் கற்று அதில் பாண்டித்தியமும் பெற்று ஒரு ஆசிரியரானார். பண்டிதர் அப்பா உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்து ஒரு சில வருடங்களில் முதலாம் தர சான்றிதழைப் பெற்று பதவி உயர்த்தப்பட்டார். மூன்று தலை முறை மாணவர்களை தன்னகத்தே கொண்டு மாணவரிடம் நல்லாசிரியராக திகழ்ந்ததுடன் கல்லூரி வளர்ச்சிக்கும் அரும் பாடுபட்டவர் தான் பண்டிதர் அப்பா.

பல சமூக சேவைகளை செய்து கொண்டிருக்கும் வேளையில் 1944இல் மண வாழ்க்கையில் உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்த உறவு முறையான கணபதிப்பிள்ளை மாணிக்கம் தம்பதியினரின் ஏக புத்திரியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவமணியை மணம் முடித்தார். பண்டிதர் அப்பாவின் இல்லற வாழ்வில் மூத்த மகனாக தவேஸ்வரன் பிறந்தார். அவரைத் தொடர்ந்து தங்கேஸ்வரன், இராசகுலேஸ்வரி, விமலேஸ்வரி, ஜெகதீஸ்வரி, தனேஸ்வரன், ஞானேஸ்வரன் ஆகியோரைப் புத்திர புத்திரிகளாகப் பெற்றார்.

பண்டிதர் அப்பா எனது வீட்டு ஒழுங்கையால் செல்லும் போது நஷனல் போட்டும் வேட்டி உடுத்தியும் புன்சிரிப் போடும் செல்வார். தானுண்டு தன் வேலையுண்டு என்றில்லாமல் பல சமூகப்பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அதற்கு உதாரணமாக அயலவர்களின் இல்லங்களில் நடைபெறும் திருமணவிழாக்கள், பூப்புனித நீராட்டுவிழாக்கள், மரணக்கிரியை போன்றவற்றில் கலந்து கொள்வார். இதே போன்று அவரது பிள்ளைகளும் சமயப் பணிகளில் ஈடுபாடு கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். அவரது மகன் திரு வே.ஞானேஸ்வரனும் அவரது மனைவி இராஜகுமாரியும், அவரது மருமகன் திரு ந.சந்திரராசாவும் அவரது மனைவி விமலேஸ்வரியும் இணைந்து எங்களது உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் ஆரம்பப்பிரிவு பாடசாலை ஆரம்பிப்பதற்கு 50 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கள் வீட்டை அன்பளிப்பு செய்தமை சொல்லாலும் எழுத்துக்களாலும் பாராட்ட முடியாத விடயமாகவே உள்ளது. அதாவது அமரத்துவம் அடைந்த பண்டிதர் அப்பாவும் அவரது மனைவி தவமணி அவர்களின் நினைவாக காணியும் வீடும் அவர்களது பிள்ளைகளால் அன்பளிப்பு செய்யப்பட்டமை குறிப்பிடத் தக்கது. பண்டிதர் அப்பாவின் பிள்ளைகள் சமூக பணிகளில் ஈடுபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு சகல வகையிலும் உதவிகளைச் செய்து வருகின்றனர்.

" சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும்
அறத்திநூ உங்கு

ஆக்கம் எவனோ உயிர்க்கு ......"எனும் வள்ளுவர் வாக்குக்கு இணங்க வாழ்ந்து காட்டியவர் தான் எங்கள் பண்டிதர் அப்பா.

**திரு .சு .கிருஷ்ணகுமார்,**
**அதிபர்,**
**யா /உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி,**
**உடுப்பிட்டி,**
**வல்வெட்டித்துறை.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய நினைவுகள் இன்னும் தொடர்கிறது

அநேகமானோரின் வாழ்க்கையில் சுமார் பத்துப் பதினைந்து வருடங்கள் பாடசாலையில் கழிகின்றது. 60களுக்கு முந்திய காலத்தில் கல்லூரியில் ஆண்டு ஒன்றுக்கு அனுமதி என்பது கஷ்டமான விடயமல்ல- பள்ளியில் நுழைவதற்கு முந்திய காலம் எவ்வளவு தான் முயன்றாலும் நினைவுக்கு வருவதில்லை. பாடசாலையின் பின் சில சில முதல் அனுபவம் எப்போதாவது இடையிடையே நினைவுக்கு வரும். ஆனால் சுமார் 5 வயதிலிருந்து 15- 16என பள்ளிப்பருவத்து நினைவுகள் பசுமையாகவே இருக்கிறது. ஓரே பெயரில் பலரைச் சந்திக்க நேர்ந்தாலும் கேட்க நேர்ந்தாலும் இப்படி ஒருவன் என்னோடு படித்தான் எங்கள் ஊரில் இருந்தான் என்போம். ஆசிரியர்களும் அதற்கு விதிவிலக்கல்ல அந்த வகையில் பாடசாலைக் காலத்திலும் சரி - அதற்குப்பின்னரும் சரி தமிழ்மொழியிலும் சைவசமயத்திலும் எனக்கிருந்த ஈடுபாடு காரணமாக பல பண்டிதர்களோடு பழகினாலும் முதலில் நினைவுக்கு வருபவர் **பண்டிதர் வேலுப்பிள்ளை** தான்

பல காரணம் சொல்லாம் English Teacher, Maths master Chemistry Sir என்று பாடத்தோடு இணைத்துச் சொல்லும் ஆசிரியர்களை அடையாளம் காட்டும் போது இவரை மட்டும் **"பண்டிதர்"** என்று ஒரு சொல்லோடு ஆசிரியர்களும் மாணவர்களும் மட்டுமன்றி ஊரவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளப்படுத்துவர். உயரமான உருவம் எப்போதும் வெள்ளை வெளேரென்றிருக்கும் வேட்டியும் நாஷனலும் ஒரு தனிப்பொலிவைக்கொடுக்க - புன்முறுவல் தவழும் முகம். அவர் குரலில் ஒரு வகை சாந்தமும் தெளிவும் இருக்கும். அவரிடம் தமிழையும் சமயத்தையும் படிக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அப்படிக் கொடுத்து வைத்தவர்களில் நானும் ஒருவன்.

முன்பு ஒரு சமயத்தில் பண்டிதரைப் பற்றிக்குறிப் பிடுகையில்- **“இதிகாசக் கதைகளிலும் இலக்கியப் புத்தகங்களிலும் வரும் ‘ஆஜானுபாகுவான தோற்றம்- வெள்ளை வேட்டி, வெள்ளை நாஷனல் வெள்ளை உள்ளம் .அது மட்டுமல்ல சாதாரணமாக அவர் நாவில் தவழும் செந்தமிழும் - சிரிப்பது போலில்லாமல் சிரிக்கும் மெல்லிய புன்முறுவலும் சகலரையும் காந்தமெனக் கவர்ந்து விடும். தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்ற பண்டிதர். கைப்பந்தாட்டம் உட்பட விளையாட்டுத்துறையிலும் வழிகாட்டியாகத்திகழ்ந்தவர்”** என்று குறிப்பிட்டதை மீண்டும் அப்படியே குறிப்பிட விரும்புகின்றேன்.

பண்டிதருக்கும் எனக்கும் உள்ள தொடர்பு ஆசிரிய மாணவத்தொடர்புக்கு மேலாக இருந்ததையும் பதிவு செய்ய விரும்புகின்றேன். நண்பர் கந்தையா நீலகண்டன் தூண்ட ஆசிரியர்கள் மாத்திரம் உரையாற்றும் ‘அசெம்பிளி’ என அழைக்கப்பட்ட கல்லூரி மேடைகளில் சரிநிகராக தொடர்ந்து உரையாற்ற வைத்தவர் - பண்டிதர். அவர் ஓதிய தமிழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயமும் கபொத(சாத) பரீட்சையில் விசேட சிறப்புச் சித்திகளை அள்ளிக்குவிக்க கபொத(உ த) கலை வகுப்பில் ஓரேயொரு மாணவனாக இருந்த எனக்கு அலுப்புச் சலிப்பின்றி அருமையான தமிழையும் சமஸ்கிருதத்தையும் சொல்லித்தந்ததும் இனிமையான நினைவுகளே!

இந்து வாலிபர் சங்க போஷகராக இருந்து - வாலிபர் சங்கத்தலைவனாக என்னை உயர்த்தி - உடுப்பிட்டி அ.மி.க.வி லிருந்து யாழ்.இந்துக்கல்லூரிக்குச் சென்ற பின்பும் சரஸ்வதி பூசையின் போது என்னை அன்புடன் அழைத்து உரையாற்ற வைத்து பெருமைப்படுத்தியதும் இனிய நினைவுகள்.

சிறு வயதில் தொழில் கிடைத்து கொழும்புக்கு வந்தாலும் - விடுதலையில் வீட்டுக்குச் சென்று மாலை வேளை சந்திப்பக்கம் செல்லும் என்னை பண்டிதர் தன் மகன் கடையிலிருந்தவாறே அழைத்து வாஞ்சையுடன் குசலம் விசாரித்து நலமாக வாழ நல்வழி காட்டியதும் மறக்கவொண்ணா இனிய நினைவுகள்.

அவர் மகன் தவேஸ்வரன் என் நண்பன்- சில வகுப்புகளில் என் வகுப்பு வாசியும் கூட- அவன் துறை விஞ்ஞானம் என தொடர்ந்து தொழில் நுட்ட தொழில் தொடர-என் துறை கலையாகி நிர்வாகியாக்கியது. 1969ல் தவேஸ்வரன் கல்கமுவ T.T.I என்ற தொழில் நுட்ப கல்லூரியில் கல்கமுவ கலைவிழாவுக்கு நூரளை பொலிஸ் அலுவலகத்தில் கடமையாற்றிய என்னை அழைத்து தான் பருகாது என்னை என் விருப்பத்ததிற்கேற்ப நீராகாரம் பருக வைத்து தன் விருப்பத்திற்கேற்ப தன் சகபாடிகளை சம்மதிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து கலை நிகழ்ச்சிக்காக மேடையேற்றிய போது- 1966ல் யாழ்.இந்துவிலிருந்த என்னை உடுப்பிட்டி அ.மி.க.வுக்கு உரையாற்ற அழைத்த பண்டிதரின் நினைவும் இதயத்துக்கு இனிய சுகத்தைத் தந்தது.

**'சரஸ்வதி தங்குமிடத்தில் இலட்சுமி தங்க மாட்டாள் என்ற கூற்றைப் பொய்யாக்கி, கல்வியோடு, செல்வம், வீரம் ஆகியனவும் நிரம்பப் பெற்று முன்னோடியாக வாழ்ந்து காட்டி பலருக்கு வாழ்வளித்த ஆசிரிய தெய்வம் பண்டிதர் சி.வேலுப்பிள்ளை'** என மூன்று வருடங்களுக்கு முன் சுவிஸ் வானவில் மலரில் எழுதினேன். தான் பெற்ற நிலச்செல்வத்தை ஞானத்தை வழங்கும் கல்விக்கூடத்துக்கு வழங்கும் பண்டிதர் மகன்- பண்டிதரின் இன்னொரு வாரிசு "ஞானம்" என செல்லமாக அழைக்கப்படும் வேலுப்பிள்ளை ஞானேஸ்வரன்.- ஞானத்தை நினைப்பதும் இனிய நினைவுகளே!

சுவிஸ் செல்லும் வேளைகளில் ஞானம் தன் நேரத்தையும் சுவிஸ் பிராங்குகளையும் செலவிட்டதை பெரிதாக எண்ணி மகிழ்ந்த போது இப்போது ஐம்பது லட்சத்துக்கு மேல் பெறுமதியான நாலு பரப்பை வீட்டோடு-ஏனைய அடிப்படை வசதிகளோடு தந்தை படிப்பித்த தாம் படித்த கல்லூரிக்கு வாரிக்கொடுக்கும் போது வாழ்த்தக்கிடைத்த வாய்ப்பும் இனிய நினைவுகளாக இன்னும் தொடர்கிறது.....

**உடுவை எஸ்.தில்லைநடராசா**
**பண்டிதரிடம் படித்த மாணவன் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்த பின்னரும் மனதில் வாழும் பண்பான பண்டிதர்

பிள்ளைகளின் கல்வியை மேலாக மதித்த என் பெற்றோர் மலாயா சுக போகங்களைத் துறந்து கல்வியில் சிறந்து விளங்கும் யாழ்ப்பாணத்துக்கு வந்த போது ஆரம்பத்தில் வீட்டுக்கு சமீபமாக அமைந்த கரணவாய் அரசினர் கல்லூரிக்கு அனுப்பினாலும் 1958ல் ஆறாம் வகுப்பிலிருந்து கல்வியைத்தொடர உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்கு அனுப்பினார்கள்.

அது கிறிஸ்தவ பாடசாலையாக இருந்ததால் நான் பின்பற்றும் சமயத்தைப் பற்றி பாடசாலையில் 1962ம் ஆண்டு வரை அறிந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இருப் பினும் தகுந்த தமிழாசான்கள் அமைந்ததால் தமிழறிவை வளர்த்துக்கொள்ள வாய்ப்புகள் கிடைத்தது. தமிழறிவை மெருகேற்றிய பெருமையில் பண்டிதர் வேலுப்பிள்ளைக்கும் பங்குண்டு. நண்பன் தில்லை (உடுவை தில்லைநடராசா) யும் நானும் நல்ல நண்பர்கள். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் தமிழும் சமயமும் எமதிருகண்கள் எனக் கூறிக்கொள்வோம்.

1961ம் ஆண்டு சரஸ்வதி பூசையை கல்லூரியில் கொண்டாட முயன்று நானும் தில்லையும் மாத்திரமல்ல பல மாணவர்கள் கல்லூரி நிர்வாகத்திடம் நன்றாக வாங்கிக்கட்டிக்கொண்டோம். அப்போது எங்களைத் தேற்றி ஆறுதல் கூறி எங்களுக்கும் காலம் வரும் என சாந்தப்படுத் தியவர் ஆசிரியர். பண்டிதர் வேலுப்பிள்ளை. சமய நம்பிக்கை நிறைந்த எங்களின் பிரார்த்தனைகள் வீண்போக வில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த நிர்வாகத்திடம் வாங்கிக்கட்டினோமோ அதே நிர்வாகம் 1962 சரஸ்வதி பூசைக்கு சமூகமளித்து விழாவைப்பார்த்து மகிழ்ந்து பாராட்டி பிரசாதம் வாங்கிய நிகழ்வும் இடம் பெற்றதோடு-உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் இந்து வாலிபர் சங்கமும் ஆரம்பிக்கப்பட்டது.

நிர்வாகம் முரண்பட்ட போது ஆறுதல் கூறிய பண்டிதர் அதே நிர்வாகத்தால் இந்து வாலிபர் சங்க போஷகராக நியமிக்கப்பட்டார். நண்பன் உடுவை தில்லை வாலிபர் சங்க தலைவராகவும் நான் செயலாளராகவும் மாணவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டோம். அக்காலத்தில் ஆலோசனை வழங்கி வழி காட்டி எழுதவும் பேசவும் சந்தர்ப்பங்கள் வழங்கியவர் பண்டிதர் வேலுப்பிள்ளை.

அவை படிப்படியாக வளர்ந்து தில்லையை இலங்கை அரசாங்கத்தின் இந்து கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் பணிப்பாளராக உயர்த்தியது. என்னை அகில இலங்கை இந்து மாமன்ற பொதுச் செயளாராக நீண்ட காலம் பணியாற்ற வைத்ததுடன் அண்மையில் அகில இந்து மாமன்ற தலைவராகவும் உயர்த்தி இறைபணியும் சமூகப் பணியும் ஆற்றத்தக்க பலத்தையும் நலத்தையும் தந்திருக்கிறது.

இவற்றுக்கெல்லாம் ஏதோ ஒருவகையில் காரணமாகிய ஆசிரியர்-பண்டிதர் வேலுப்பிள்ளை என்றும் எங்கள் மனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் பண்பாளர் என்பதைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

**கந்தையா நீலகண்டன்**
**சட்டத்தரணி**
**தலைவர்-**
**அகில இலங்கை இந்து மாமன்றம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் வியந்த எனது மாமனார்

**நா**ன் 1982 இல் அவர்களது இரண்டாவது மகள் விமலேஸ்வரியை திருமணம் செய்தேன். அதனால் அவர் எனது அன்பிற்கும் மரியாதைக்கும் உரிய மாமனார் ஆனார். திருமணமான புதிதில் மரியாதையின் நிமித்தம் அவருடன் அளவுடன் உரையாடுவது வழக்கம். ஆனால் ஆறு மாத காலத்திற்குள் தனது அன்பினால் என்னை தனது பிள்ளையாக நேசித்து வந்தார். அதேபோல்தான் எனது மாமியாரும் என்னை நேசித்து வந்தார்கள். அவர்களின் பாச ஈர்ப்பினால் எனது மாமன் மாமி ஆகிய அவர்களை ஐயா, அம்மா என்று அழைக்கும் அளவிற்கு தங்கள் உதிரத்தில் ஓர் உறவாக என்னை ஆக்கிவிட்டார்கள்.

நான் காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத் தாபனத்தில் பணிபுரிந்து வந்ததினால் பணியின் நிமித்தம் அவருடன் அதிக நேரம் செலவிடும் வாய்ப்பு குறைவாக இருந்தது. ஆனால் வடமராட்சிப் பிரச்சினையின்போது ஊரடங்கு சட்டநேரத்தில் வெளியில் செல்ல முடியாத தருணங்கள் நீண்டுகொண்டே சென்றன. அப்பொழுது வீட்டின் முன் கதிரை போட்டு மாலை மூன்று மணி தொடக்கம் இரவு பத்து மணிவரை எல்லோரும் கூடிப் பேசுவது வழக்கம். அப்பொழுதுதான் அவரது அறிவையும் அனுபவத்தையும் தெரிந்து கொண்டேன். நிறைகுடம் தளம்பாது, என்ற பொன்மொழிக்கு ஏற்ப தனக்கு எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியும் என்று தம்பட்டம் அடித்தது கிடையாது. ஏன் என் வாழ்நாளில் அவரைப்போல தமிழ், சமய, சமஸ்கிருத அறிவுடன் ஆங்கில அறிவும் கொண்ட பன்முகத்திறமை கொண்ட ஒருவரை சந்திக்கவில்லை என்ற கூறினால் அது மிகையாகாது.

அவரின் பொதுச்சேவைகளுடன் பாடசாலைக்குச் செய்து வந்த சேவைகளை அறிந்து கொண்டது மட்டுமல்லாது வடமராட்சி பிரச்சினையின்போது அம்மன்கோவிலில் இருந்து தனது வீட்டைப்பற்றி பொருட்படுத்தாது, பாடசாலை எரிகிறதே என்று நெஞ்சில் அடித்து வேதனைப்பட்டதை இன்றும் மறக்க முடியாது. இதிலிருந்து பாடசாலைமீது அவர் கொண்டி ருந்த அன்பையும் அக்கறையையும் உணரமுடிகிறது.


அவரது இளைய மகன் ஞானேஸ்வரன் அன்னார் வாழ்ந்த இல்லத்தை அன்னாரதும் அவரது சகல முன்னேற்றத்திலும், சமூகம் சார் செயற்பாட்டிலும் இறுதிவரை உறுதுணையாக இருந்த அவர்தம் அன்புத்துணைவியார் நினைவாகவும் பாடசாலையின் ஆரம்பப்பிரிவை நிறுவுவதற்கு வழங்கப்போவதாக என்னுடன் உத்தேசித்தபோது மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தது மட்டுமல்லாமல் என் குடும்பமும் ஓர் உந்து சக்தியாக இருந்ததை என் வாழ்நாளில் கிடைத்த பிறவிப்பயனாக எண்ணுவதோடு அவர் உயிராக நேசித்த பாடசாலைக்கு இதை செய்வதையிட்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையும் என்பதை நினைத்து ஆறுதலடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தனது இறுதிக் காலத்தில் உடுப்பிட்டிப் பிள்ளைகளுடன் சந்தோஷமாக இருக்கவே ஆசைப் பட்டார். கொழும்பிற்கு வந்தபின் அவர் சுகதேகியாக இருக்கவில்லை. பகவத்கீதையின்படி கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்ற கூற்றுக்கேற்ப வாழ்ந்து காட்டிய பெரியார் பண்டிதர் உயர்திரு. வேலுப்பிள்ளை அவர்களுடன் ஏற்பட்ட அனுபவத்தை விபரிக்க வார்த்தைகள் இல்லை. இம்மலரின் மூலம் அவரை நினைவு கூர்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**அன்பு (மரு)மகன்**
**ந.சந்திரராஜாBSc (Eng)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புண்ணியம் கோடி...

புண்ணியம் என்ன என்று கேட்டால், ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைச் சொல்லுவார்கள். ஆனால் தமிழ்த்தாய் தந்த தவப்புதல்வர் மகாகவி பாரதியோ!

இவ்வுலகில் மிக உயர்ந்த புண்ணியங்களாக கருதப் படுவது இவைதான் என்று கூறுகிறார்

அவை

இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்,
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம்பதி னாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்.

ஆம்! இது எவ்வளவு உண்மை. பாரதியின் ஒவ் வொரு சொல்லும், தீர்க்க தரிசனமானவை. வள்ளுவரும் பாரதியும் தெய்வப்புலவர்கள். அவர்கள் தந்த நூல்கள் தெய்வீகத் தன்மை பொருந்தியது. தமிழுக்குக் கிடைத்த அரும் பெரும் சொத்துக்கள். ஒவ்வொரு மனிதனும் படிக்க வேண்டியது, கடைப்பிடிக்க வேண்டியது, போற்ற வேண்டிய நூல்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்**

நாட்டிலும் வீட்டிலும் நிறைய மரங்களை வளர்த்து சோலையாக்க வேண்டும். இயற்கைக்கு எதிராக மரங்களை வெட்டி அழித்ததினால் இன்று பூமி அழிவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. பூமியின் வெப்ப நிலை கூடிச் செல்கின்றது. மழைவீழ்ச்சி குறைந்து விட்டது. எங்கு பார்த்தாலும் இயற்கையின் சீற்றத்தால் பேரழிவுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

முக்கியமாக எமது பிரதேசத்தில் இன்று எமது வருங்கால சந்ததிக்கு துணையக இருக்கப்போகின்ற வேளாண்மை கூட பொய்த்து விடப் போகிறது. இதைத் தவிர்க்க வேண்டுமெனில் மகாகவி கூறிய பிரகாரம் நாம் எல்லோரும் முயன்று வீட்டிலும், நாட்டிலும் திரும்பவும் மரங்களை நாட்டி, நறுஞ்சோலைகளாக்கி எமது பிரேதசத்தைக் காப்பாற்ற வேண்டும்.

**இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்**

இதுவும் எமது பிரதேசத்தில் மிகமிக முக்கியமான தொன்றாக கருதப்படுகிறது. நிலத்தடி நீரை மட்டும் நம்பி வாழ்பவர்கள் நாங்கள். அதுவும் வற்றிக் கொண்டு - போவதாக அறிவியல் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இதுவும் எமது உயிர் பிரச்சினை.

''நீர் இன்று அமையாது உலகு''
''பசும் புல்லும் தலைகாண்பு அரிது''
''நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏரின் உழார் உழவர்''
''உழா நின்று உடற்றும் பசி''

என்று இடித்து இடித்து எமக்கு மழையின் முக்கியத்து வத்தையும் நீரின் அத்தியாவசியத்தையும் எடுத்துரைத்து சென்றார் தெய்வப்புலவர் திருவள்ளுவர். ஆனால் நாங்களோ இதைக் கவனத்தில் கொள்ளவில்லை. போனது போகட்டும்! இனியாவது எச்சரிக்கையுடன் இருப்போம். எமது பிற்கால சந்ததிக்கு வழிசமைத்துச் செல்வோம்.

''வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று''

ஆம். மழை நீரே இறைவனால் தரப்பட்ட அமிர்தம் என்று உணரவேண்டும். அதைப் பாதுகாக்க வேண்டும். அதைப் பெருக்க வேண்டும். புனித நீராகக் கருதி போற்ற வேண்டும்.

எமக்கு வேறு வழியில்லை. நிலத்தடி நீர் மட்டுமே தஞ்சம். அதன் வளத்தை குறைய விடாது பெருக்க வேண்டும். பாரதி கூறிய இனிய நன்னீர் சுனைகளை பூமியில் அமைக்க வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் ஏரி, குளம், குட்டை ஏற்படுத்த வேண்டும். முடிந்தளவு மழை தரும் கொடையை வீணாக கடலுக்கு செல்ல விடாது பூமியில் நிலப்பரப்பில் தடுத்து நிறுத்தி, சேகரித்து நிலத்தடி நீரின் வளத்தைப் பெருக்க வேண்டும். ஒவ்வொருவருடைய வீடு, தோட்ட, வளவுகளில் விழும் நீரை சேகரித்து, பூமிக்குள் செலுத்த வேண்டும். ஒவ்வொருவருடைய வீட்டிலும், இரு கிணறுகள் வெட்டப்பட்ட வேண்டும். ஒன்று பாவனைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்க வேண்டிய கிணறு, மற்றையது வளவில் விழும் மழைநீரை பூமிக்குள் செலுத்தும் கிணறு. இப்படி நாம் செய்தால் தான் எமது பூமியை காப்பாற்ற முடியும்.

மக்கள் வாழ வேண்டும். நாடு செழிக்க வேண்டும் என்றால்! புலவர் குடப்புலவியனார் பாண்டிய மன்னர் நெடுஞ்செழியனுக்கு நீரின் முக்கியத்துவத்தை இப்படி இடித்துரைக்கின்றார்.

''நீரின்றி அமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரி யோரீண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே"

அதாவது, நீரால் உண்டான உடல்களுக்கெல்லாம் உணவு கொடுப்பவரே உயிர் கொடுப்பவராவார். உடம்பு உணவையே அடிப்படைத் தேவையாகக் கொண்டது. உணவு என்பது நிலத்தோடு நீரைத் தேக்குவது ஆகும். நிலத்தில் நீரைத் தேக்கி வைப்பவர்கள் உடலையும் உயிரையும் சேர்த்தோர் ஆவர்.

அனுபவிப்பதுவரை அனுபவித்து விட்டு நாம் போய் விடுவோம். வருங்கால சந்ததியினர் எக்கேடு கெட்டால் நமக்கென்ன என்று நாம் வாளாதிருந்து விட முடியாது. நமது முன்னோர்கள் நாம் சந்தோஷமாக வாழ மாசு படாத பூமியை விட்டுச் செல்வதுதானே நியாயமாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் ஒவ்வொருவரும் யோசிக்க வேண்டிய இன்றியமையாத பிரச்சினை இது!

## அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்

இன்று பலர் ஆதரவற்றவர்களாக உள்ளனர். அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து, உணவளிக்க வேண்டியது, இருப்பவர்களின் கடமை. கிராமத்துக்கொரு ஆதரவற்றோர் இல்லங்களை அமைத்து, அடைக்கலம் கொடுத்து, வாழ வைக்க வேண்டியது சமுதாய கடமையாகிறது.

## ஆலயம் பதினாயிரம் நாட்டல்

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம். என்பது முன்னோர் சொன்ன அருள்வாக்கு. ஆலயங்கள் மட்டுமே மனிதனை நேர்வழியில் கொண்டு செல்லும் ஒரே மார்க்கமாகும். இன்று உலகில் எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை, களவு, வன்செயல்களினால் மக்கள் அழிந்து கொண்டிருக்கின்றார்கள். அன்பு, கருணை, காருண்யம் அற்றுப் போய்விட்டது. மனிதாபிமானம் குன்றிவிட்டது. இதற்குக் காரணம் ஆன்மீகப் பற்று குறைந்து வருவதுவே. ஆன்மீகத்தை வளர்த்து வருவது ஆலயங்கள் மட்டுமே.

''பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்''

இவை நான்கையும் பெரும் புண்ணியங்களாகக் கருது கின்றார் பாரதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால்! இந்நான்கையும் விட உயர்ந்த புண்ணியம்
''அனையாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்''

அதாவது, ஓர் ஏழைச் சிறுவனுக்கு கல்வி அறிவை ஊட்டுவது மேற்சொன்ன புண்ணியங்கள் எல்லாவற்றையும் விட உயர்ந்தது. கோடிப் புண்ணியத்திற்கு ஒப்பானது என்பதை, அன்றே எமக்கு சொல்லி வைத்தார் தீர்க்கதரிசி மகாகவி பாரதியார் அவர்கள்.

உடுப்பிட்டி ஒரு கிராமம். இங்கு வாழ்பவர்கள் அநேகமானோர் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களது வாழ்வு வளம் பெற வேண்டுமானால் சிறந்த கல்வி ஊட்டப்படவேண்டும். சிறந்த கல்வியை ஊட்டுவதற்கு சிறந்த பள்ளிகள் அமைய வேண்டும். அப்பள்ளிகளுக்குத் தேவையான வளங்களும் வசதிகளும் ஏற்படுத்தப் படவேண்டும். இதுவே இன்று நடைபெறும் இருக்கும் விழாவின் முக்கியக் குறிக்கோள் ஆகும்.

அமரர். சின்னத்தம்பி வேலுப்பிள்ளை பண்டிதர் அவர்கள் அப்பள்ளியிலே படித்து, அப்பள்ளியிலே வாழ்நாள் முழுவதும் ஆசிரியராகக் கடமையாற்றியவர். அவர் கற்பித்த காலத்தில் இக்கிராமத்து மாணவர்களுக்கு அவர்களது தாய்மொழியான தமிழையும், மனிதனை மனிதனாக்கும் சமயிகள் ஆக சமயத்தையும் தன் வாழ்நாள் முழுவதும் போதித்து, மாணவர்களை நன்நெறிப்படுத்திய ஒரு பெருந்தகையாவார். இவரிடம் பயின்றவர்கள் இன்று பெரும் அறிஞர்களாகவும், புலவர்களாகவும், எழுத்தாளர்களாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திஜீவிகளாகவும், ஆசிரியர்களாகவும் வாழ்ந்து வருவது நாடு அறிந்ததே. எவ்வேளையிலும் வெள்ளை வேஷ்டி, வெள்ளை நீள மேலங்கி, வெள்ளை சால்வையுடன் தூய்மையாக காட்சி தருவார். அவர் செய்த சேவையும் அத்துணை தூய்மையானதே.

இன்று அவர் அமரராகி விட்டபோதும் தான் வாழ்ந்த வீட்டையும் அதனுடன் சேர்ந்த காணியையும் பாதுகாப்பான சுற்றுமதிலையம் கல்லை குடைந்தெடுத்து தோண்டப்பட்ட கேணி போன்ற நன்னீர் கிணற்றையும் (அக்கிணறு மட்டும் இன்று ரூபா பதினைந்து லட்சத்திற்கும் கட்டமுடியா தொன்றாகும்) அப்பள்ளிக்கே தானமாக வழங்குவதை என்னென்று எடுத்து கூறுவது இக்கொடையை விட வேறு ஏதாவது உயர்ந்தது உண்டா? வாழ்ந்த காலத்தில் அப்பள்ளிக்கே தன்னை அர்ப்பணித்த இப்பெரியார் மறைந்த காலத்திலும் தன் உடைமைகளை அப்பளிக்கே நன்கொடையாகக் கொடுப்பது கோடிப் புண்ணியமாகக் கருத முடியாதா?

இப்புண்ணிய கைங்கரியத்தை அவரது புதல்வருள் ஒருவரான வேலுப்பிள்ளை ஞானேஸ்வரன் குடும்பமும், அவரது மருமகன் நடராஜா சந்திராஜா குடும்பமும் முன்னின்று செயல்படுத்தி வாரி வழங்கி அப்பள்ளிக்கே அர்ப்பணிப்பது மிகமிகப் போற்றத்தக்க உயர்ந்த கைங்கரியமாகும்.

போற்றுகின்றேன்! வாழ்த்துகின்றேன்!!

**நன்றியுடன்**
**பணிவுடையள் இன்சொலன்**
**குறளமுதம் விநாயகசோதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பண்டிதர்" எனது கிராமத்தின் ஒரு குறியீடு!

அமரர் பண்டிதர் வேலுப்பிள்ளை எனது கிரமத்தைச் சேர்ந்தவர். அவரின் குடும்பத்தார் எம்மோடு நெருங்கிய உறவு கொண்டவர்கள்.

அன்னார் சிறுவனாக இருந்த காலத்தையும் எமது கிராமத்தையும் ஒப்பிட்டு பார்க்கும் போது அவரது கல்வித் திறமையை என்னால் அறிய முடிகின்றது. பல்வகை வசதிகளுமற்றிருந்த கிராமங்களிற்கு எமது கிராமம் நல்லதொரு குறியீடாகும். கல்வியை, திறமையை போற்றும் சூழல் அற்றிருந்த அக்காலத்தில் எம் கிராமத்தில் எழுத்தறிவு பெற்றிருந்தவர்களை விரல்விட்டு எண்ணலாம். அச் சூழலை எதிர்த்து நின்று கற்றார் என்றால் அது ஒரு சாதனையே.

பண்டிதருடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் எனக்கு கிட்டவில்லை. அதற்கு நான் சிறுவனாக இருந்த போதே அவர் அயல் கிராமமாகிய உடுப்பிட்டியை வதிவிடமாகக் கொண்டதும், நான் எனது தந்தையாருடன் பட்டணம் போனதும் காரணங்களாக அமைந்தன. இருந்த போதும் எனது மாணவப் பராயத்தில் அவரிடம் கல்வி கற்ற எமது ஊர் நண்பர்கள் ஊடாக அவரின் கற்பிக்கும் திறனையும் கட்டுப்பாட்டையும் அறிய முடிந்தது. அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் போற்றத்தகு ஆசிரியராக கடமையாற்றி ஓய்வு பெற்றார்.

அவரின் மாணாக்கர் பலர் போற்றத்தகு நிலையில் இன்று வாழ்வதும் அவரை நினைவு கூருவதும் அவரது ஆசிரிய சேவைக்கு உரைகல்லாக அமைகிறது எனத் துணிந்து கூறலாம். அவரின் மறைவால் எமது கிராமம் ஆரம்பகால கல்வியாளருள் ஒருவரை இழந்துள்ளது.

**சுந்தரம் டிவகலாலா,**
**செயலாளர்**
**கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு**
**வடக்கு கிழக்கு மாகாணம்,**
**திருகோணமலை.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசானைப்பற்றி மாணவன்

ஆனவுடுப்பிட்டி அமெரிக்கமி ஷன் கல்லூரி
ஈனமிலா தோங்க வியைந்த கல்வித்-தானநன்கு
செய்த வேலுப் பிள்ளையெனுஞ் செய்ய தமிழ்ப் பண்டிதனை
எய்தியமன் கொண்டானென்னே!

பண்டிதரும் போற்று தமிழ்ப் பண்டிதனை வீறுதமிழ்த்
தொண்டிதமாச் செய்த துரைமகனை- விண்டலத்துக்
கேற்றவனா மென்றோ விரக்கமொரு சற்றுமின்றிக்
கூற்று வந்து கொண்டான் குறித்து ?

செந்தமிழு மாங்கிலமுஞ் செப்பு வடமொழியுஞ்
சிந்தையுறக் கற்று மிகத் தேர்ச்சி பெற்றோன் - அந்தமிலாப்
பேராண்டு நின்ற வேலுப்பிள்ளையெனும் பண்டித னெவ்
வூராண்டு நிற்பா னுவந்து

பற்பலரும் போற்றுமுயர் பாங்கிற் பொதுத்தொண்டு
விற்பனமாச் செய்தவே லுப்பிள்ளை - சிற்பரனார்
தம்முலகோ எங்கள் தமிழ்த்தாய் யவளுலகோ
செம்மையுற வுற்றான் தெரிந்து

## கலித்துறை

வருத்த மெதுதான் மருவி யுறினுமுள் வாட்டமின்றித்
திருத்த முறவே துவாளியிற் கண்ணகி சீரடிகட்
குருத்த கிளர்ச்சியி லாம்பணி யோவாதுவந்து செய்த
நிருத்த னெறிவேலுப் பிள்ளை யவற்கான நேரெவரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுணக்க மிலாமற் கலக்க மிலாதுளச் சோர்விலாமல்
இணக்க சபைக்குத் தலைவனாய் நீதியிகந்திடாமல்
வணக்க மெவரும் புரிந்திடத் தீர்ப்பு வழங்கிய சீர்
மணக்க வமர்ந்த னெம் வேலுப்பிள்ளை மதியரசே

உற்றா ருவக்க வுரியோ ருவக்க வுயர் கலைகள்
கற்றா ருவக்க பெரியோ ருவக்கக் கன நிதியம்
பெற்றா ருவக்க நலிந்தோ ருவக்கப் பெரிதிருந்தாய்
மற்றார் வெறுப்பெது பண்டித கொண்டு மறைந்தனையே

## கொச்சகக்கலிப்பா

மதியிழந்த வெளியானோம் மலரிழந்த பொழிலானோம்
சுதியிழந்த விசையானோம் சுடரிழந்த விளக்கானோம்
துதியிழந்த நாவானோம் துணையிழந்த பெடையானோம்
விதியிழந்த பிறப்பானோம் வேற்பிள்ளைப் பண்டிதனே

கடலினலை புரளவில்லை கதிர் மதியஞ் சுடரவில்லை
மடமயில்க ளசையவில்லை மறியினம்பால் குடிக்கவில்லை
வடகாற்றுத் தவளவில்லை வரிக்குயில்க ளிசைக்கவில்லை
திட வேலுப் பிள்ளையங்குச் சென்றபிரி வதனாலே

## என்சீர் விருத்தம்

செய்ய தமிழ் தந்த பிள்ளை சீரார் சைவச்
சிறப்பினை நன் குணர்ந்தபிள்ளை திங்கள் வேணி
மெய்யனடி யுளப்பிள்ளை மென்மை சாந்தம்
விறல் நீதி வாய்ந்த பிள்ளை மேலா மன்பால்
வெய்ய சினமொழித்தபிள்ளை மேலோர் சுற்றம்
மேவியொன்றி வாழ்ந்தபிள்ளை வீறு தொண்டால்
மெய்யினிளைப் பற்றபிள்ளை விளைசிறார்க்குள்
விரும்பியறி வளித்தபிள்ளை வேலுப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டியுரை யாடாத மென்மை யார்வல்
வெட்டியெனு மூர்பிறந்து வெற்றி தாங்கும்
பிட்டியுடுப் பிட்டி வந்து பேருஞ் சீரும்
பிணைதொண்டு நனியாற்றிப் பெருமை பெற்றாய்
மட்டினிதி பலவளமும் வாய்க்க வுற்றாய்
மாணவர்தம் முளைச்சுடராய் வயங்கி நின்றாய்
எட்டியடி வைத்தவூ ரேனோ சென்றாய்
இயல் வேலுப் பிள்ளைமன்னா வியம்பு வாயே

## அகவற்பா

தொண்டுகள் பற்பல தொடர்ந்து புரிந்தோன்
எண்டிசை யும்புக ழெய்தியற் பண்டிதன்
பிள்ளைகட் குயர்கலை விளக்கிய வேலுப்
பிள்ளையா சிரியன் பேசுவிண் ணகத்தி
பித்தனா ரிணையடிப் பேரருட் டுணையால்
நித்தியா னந்தம் நெடிதுறப் பெறுகவே

**கா. நீலகண்டன்**
**(ஓய்வு பெற்ற ஆசிரியர்)**
**புலவர்வளவு**
**இமையாணன்**
**உடுப்பிட்டி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம் புகழ் நிறுவித் தரணி நீத்த பெருந்தகை

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பண்டிதராக விளங்கிய பண்டிதர் ஐயா அவர்களின் சான்றாண்மையானது எமக்கு ஒரு உந்து சக்தியாக எம்மையும் அந்நிலைக்கு ஓரளவுக்கேனும் உயர வைத்ததென்றால் அது மிகையாகாது. சரஸ்வதி தேவியின் கடாட்சத்திற்குரியவர்கள் இலக்குமி தேவியின் கடைக்கண் பார்வைக்கு ஆளாவது மிக அரிது என்ற போதும் பண்டிதர் ஐயா அவர்கள் தேவியர் இருவரதும் கடாட்சத்துக்கு உரிய ராய் வாழ்ந்தமை இங்கு நோக்குதற்குரியது. ஏரி நிறைந் தனைய செல்வராய் வாழ்ந்த ஐயா அவர்கள் ஆலயத் திருப்பணி களுக்கும் சமூகநலப் பணிகளுக்கும் வாரிவாரி வழங்கிய தோடு நாட்டின் சூழ்நிலை காரணமாக அமைக்கப்பட்ட இணக்க சபைகளின் தலைமைப் பதவிக்கோர் அணிகலமாக விளங்கி எத்தனையோ குற்றவியற் பிரச்சினைகளையும் காணிப்பிரிவிடலையும் எது விதமான சன்மானமும் பெறாது சமாதான வழியில் தீர்த்து வைத்த பெருந்தகை.

அன்னாரின் இழப்பு இலங்கை மணித்திருநாட்டுக்கோர் பேரிழப்பாகும்.

**பண்டிதர் க. முத்துவேலு**
**இமையாணன் கிழக்கு**
**உடுப்பிட்டி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

அமரத்துவம் அடைந்த மேன்மைதகு பண்டிதர் வேலுப்பிள்ளை ஆசிரியர் அவர்களை குருவாகப் பெற்ற பாக்கியம் எனக்குண்டு. 1954 ஆம் ஆண்டு முதல் 1959 ஆம் ஆண்டுவரை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் பண்டிதர் அவர்களின் மாணாக்கனாக அவரிடம் கல்வி கற்ற பெருமைக்குரியவனாக வாழ்கின்றேன்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றிறிகு எடுத்துக்காட்டாக சக ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் உதாரண புருஷனாகத் திகழ்ந்தார்.

பண்டிதர் அவர்கள் பாடசாலை மாணவர்களுடனும் சரி சக ஆசிரியர்களுடனும் சரி பொது மக்களுடனும் சரி அன்பாகவும், ஆதரவாகவும் பண்பாகவும் பழகியவர். அவரின் உயரிய குணங்கள் அவருடன் பழகிய மக்கள், மாணாக்கர்கள் மத்தியில் அழியாமல் பதிந்துள்ளது.

பாடசாலை ஆசிரியராக பல பாடங்களையும் கற்பித்தவர். ஆனால் தமிழ் அவரின் சொத்து. தமிழை அவரிடம் கற்க கொடுத்துவைத்தவர்கள் பெருமை யடைந்தனர். அவரின் கம்பீரத் தோற்றமும், நடை உடையும் ஆழமான அறிவும் குரல் வளமும் கற்பிக்கும் திறனும் அவருக்கே உடைய மேன்மை மிகு சொத்தாகவே விளங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமை மிகு அமரர் பண்டிதர் அவர்கள் உடுப்பிட்டியில் பிறந்து எமது அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் அதிசிறந்த ஆசிரியராகக் கடமை யாற்றினார். அன்னார் ஆசிரியராக இருந்த காலத்திலும் ஓய்வு பெற்ற பின்பும் எமது கல்லூரியின் வளர்ச்சிக் காகவும் மாணவர்களின் உயர்ச்சிக்காகவும் அயராது உழைத்து தனது வாழ்க்கையை அர்ப்பணித்தார்.

கல்லூரி பழைய மாணவர் சங்கத்திற்கு என்றும் பக்க துணையாய் நின்று பல இன்னல்களின் மத்தியிலும் ஊக்கம் கொடுத்து கல்லூரியை உயர் நிலைக்கு கொண்டுவரவேண்டும் என்று முன் நின்று உழைத்தவர். ஓய்வு பெற்று வயதான காலத்திலும் கல்லூரி வைபவங்கள் எல்லாவற்றிலும் பங்குபற்றி சிறப்பித்தவர். அவரின் மறைவு எமது கல்லூரி செயற்பாட்டிற்கும் பழைய மாணவர் சங்க செயற்பாட்டிற்கும் ஒரு பெரும் இழப்பு.

நன்றி

**Dr. K. தங்கராசா** B.VSc. M. VSc. (S.L.)
**கால் நடை அபிவிருத்தி**
**சுகாதாரத்திணைக்களம்**
**வடக்கு கிழக்கு மாகாணம்**
**திருகோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளைத் தலைவர்

**பி**றந்தவர் இறப்பதும் இறந்தவர் பிறப்பதும் இயற்கையின் நியதி. ஆன்மா ஒருபோதும் அழிவதில்லை என்பது எமது சமய நம்பிக்கையாகும். இயற்கையின் நியதிக்கு நாம் யாரும் விதிவிலக்கானவர்களாக இருக்க முடியாது.

இருந்தும் ஒவ்வொரு மானிடனும் ஒவ்வொருவிதமான பங்களிப்பை விட்டுச் செல்கின்றனன். அதில் பண்டிதர் வேலுப்பிள்ளை அவர்களின் சேவையை நினைவு கூரும் போது அன்னார் இன்னும் சில காலம் எம்மத்தியில் இருந்திருக்க கூடாதா என்று எண்ணத் தோன்றுகின்றது. அன்னார் அப்படி இருந்திருந்தால் தற்போதைய கால கட்டத்தில் எமது பாடசாலைக்கும், பழைய மாணவர் சங்கத் துக்கும் எவ்வளவோ பேருதவியாய் இருந்திருப்பார் என எமது உறுப்பினர் பலர் அங்கலாய்க்கின்றனர்.

இயற்கையின் நியதிப்படி எம்மை விட்டுப் பிரிந்தாலும் அன்னாரின் பிரிவு எமது துர்ரதிஸ்டமேயாகும். அவரது ஆன்மா சாந்தியடைய எல்லோரும் பிரார்த்திப்போமாக.

பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளைத் தலைவர் என்ற வகையில் சில விடயங்களை நினைவு கூர விரும்புகிறேன். நான் பாடசாலையை விட்டு வெளியேறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதே பண்டிதர் ஐயா அவர்கள் ஆசிரியராக எமது பாடசாலைக்கு வந்தது ஞாபகம் உண்டு. அவரிடம் தமிழ் படிக்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்றாலும் எனது சகோதரன் மற்றும் வேறு உறவினர்கள், நண்பர்கள் ஆகியோர் அவரது கற்பித்தல் திறமையைப்பற்றி அளவள வாவும் போது எமது மாணவ காலத்திலும் பண்டிதர் ஐயா அவர்கள் ஆசிரியராக இருக்கவில்லையே என்று எண்ணுவ துண்டு. அவ்வளவிற்கு மாணவர்களைக் கவரக்கூடிய முறையில் கற்பித்து வந்துள்ளமை போற்றத்தக்கது.

இருந்தும் எனது விடுமுறைக் காலங்களில் சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுதெல்லாம் நான் பாடசாலைக்குப் போய் ஆசிரியர்களைக் கண்டு அளவளாவுவதுண்டு. அக்காலப் பகுதியில் பண்டிதர் அவர்களுடன் நேரடியாகப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அப்பொழுது எல்லாம் அவர் இன் சொற்களில் இனிய முகத்துடன் அளவளாவியதை நினைவு கூர்கின்றேன்.

மேலும் சமஸ்கிருதத்தை மாணவர்கட்கு ஒரு பாடமாக உயர்தரப் பரீட்சைக்கு தேர்ந்தெடுத்து விசேட சித்தியும் எய்துவதற்கு பண்டிதரே காரணமாக இருந்தார் என்பது மாணவர்மேல் அவருக்கிருந்த அக்கறையை எடுத்துக் காட்டுகின்றது. அத்தோடு நாடகக் கலையையும் வளர்ப்பதற்கு சேவை புரிந்தார். பாடசாலைக்கு அண்மையில் அவர் வசித்து வந்தமையினால் பாடசாலை முடிந்தபின்னரும் தமது சேவையை ஆற்றிவந்தமை போற்றுதற்குரியது. இளைப்பாறிய பின்னரும் தன்னாலான சேவையை ஆற்றிவந்தமை மாணவர் ஈடேற்றத்திலும், பாடசாலை வளர்ச்சியிலும் அன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ள அக்கறையை பிரதிபலிப்பதாகும். தமிழ் வராது என்று ஏங்கித் தவித்தோர் சிலர் அவரிடம் கற்று தேர்ச்சியும் பெற்றுள்ளனர்.

பண்டிதர் வேலுப்பிள்ளை எம்மத்தியிலிருந்து மறைந்தாலும் அன்னாரின் ஆத்மா எமது பாடசாலை யுடன் இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆன்னாரின் சேவைகளை தொடர்ந்தும் செய்வதற்கு அவரின் பிள்ளைகளை விட்டுச்சென்றுள்ளார்.

**கலாநிதி ஆர். மகாலிங்கம்**
**உடுப்பிட்டி, அமெரிக்கன் மிஷன் கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம் - கொழும்புக்கிளை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதர் வேலுப்பிள்ளை மாஸ்டர் காலத்தின் கண்ணாடி

பண்டிதர் வேலுப்பிள்ளை மாஸ்டர் என்று கூறினால் உடுப்பிட்டியில் தெரியாதோர் இருக்க மாட்டார்கள். அவ்வளவு பிரபல்யமானவர் அனைவராலும் விரும்பப்பட்ட வர்தான் எங்கள் பண்டிதர்.

மிகவும் சிறந்த ஆசிரியர் என்று பாராட்டப்பட்டவர். அவர் கல்வியூட்டுவதில் மட்டும் கவனம் செலுத்தாமல் மாணவர்களின் தனிப்பட்ட வாழ்வில் அவர்களை நெறிப்படுத்தும் சிறந்த ஆலோசகராகவும் திகழ்ந்தார்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறையுடன் இருந்ததை அவரது செய்கைகள் காட்டிக்கொண்டிருக்கும். தனது பதவிக் காலத்தின் பின்னரும் பழைய மாணவர்களைச் சந்திக்கும் போதெல்லாம் பாடசாலையின் தேவைகளை நினைவூட்டி உதவி செய்யும்படி வற்புறுத்துவார்.

எமது கல்லூரி மாணவர்கள் தமிழ் மொழிப் போட்டிகள், வடமாகாண மட்டத்திலான போட்டிகளில் பல பரிசுகளைப் பெறுவதற்கு தூண்டு கோலாக இருந்தவர். தமிழ்ப் பேச்சுப் போட்டிகள், விவாதங்கள், நாடகப் போட்டிகளில் வழிகாட்டியாகச் செயற்பட்டு ஊக்குவித்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது அந்த விடா முயற்சியே எமது கல்லூரி கல்வித் துறையில் மட்டுமன்றி இணைப் பாடவிதான முயற்சிகளிலும் கொடிகட்டிப் பறக்க உதவியது.

கல்லூரி வேலை நேரம் தவிர்ந்த நேரங்களில், இவர் பல சமூக நலன் திட்டங்களில் பங்கு பற்றித் தான் சார்ந்த கிராம வளர்ச்சிக்காக பாடுபட்டவர். நடுநிலைமை நின்று, பக்கச் சார்பற்று சுயமாக முடிவெடுக்கும் திறமை இருந்ததினால் ஊரில் ஏற்படும் சில பிணக்குகளை சமரசமாகத் தீர்த்து கிராமத்தவரின் நன்மதிப்பையும் பெற்றிருந்தார்.

ஆம்!... சுருங்கக் கூறின் பண்டிதரை, மாணவ உலகம் மதித்தது என்பதைவிட உடுப்பிட்டியே மதித்தது என்று கூறினால் அது மிகையாகாது!

நாங்கள் அவர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர்கள், அவரது பழைய மாணவர்களாக வாழ்பவர்கள் என்று கூறுவதில் பெருமையடைகின்றோம்.

**இ. முத்துரெட்னானந்தன் B.Sc (Eng)**
**பிரதிப் பொது முகாமையாளர்**
**இலங்கை மின்சாசபை**
**தலைவர்**
**உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி**
**பழைய மாணவர்சங்கம்**
**திருகோணமலைக் கிளை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

உலகம் எவ்வளவுதான் நவீனத்துவம் அடைந்தாலும் பூமிப்பந்தில் விரைந்த மானுட வாழ்க்கை ஓட்டத்திற்குள் மனித நேயம் மரணிக்காமல் மானுட தர்மம் சீர்தூக்கிப் பார்க்கப்படுவது மட்டுமல்லாமல் போற்றப்படுகின்றது என்பதற்கு இம்மலரில் நல்ல உள்ளங்கள் எங்கள் தந்தையாரின் நினைவுகளைப் பதிவு செய்து கொண்டது ஓர் எடுத்துக் காட்டாகும்.

நினைவுகளைப் பதிவுசெய்து கொண்டார்கள் என்பதை விட எங்கள் தந்தையின் கல்விசார் புலமையையையும், கல்லூரிசார் செயற்பாடுகளையும் நற்சிந்தனையுடன் கூடிய சமூகம் சார்ந்த பணிகளையும் அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் சென்ற போற்றத்தகு பணியைச் செய்திருக்கிறார்கள்.

ஒரு மனிதரின் அதுவும் சீரிய பண்புகளைக் கொண்ட ஒரு மனிதரின் நடை, உடை, பாவனை சமூகத்தால் எவ்வளவு தூரம் மிகக் கூர்மையாக நோக்கப்படுகிறது என்பது இங்கு புலப்படுகின்றது. குறிப்பாக ஒருவரது பண்புகளையும், நினைவு களையும் அவர்தம் குடும்பம் சார்ந்தோர் பதிவு செய்யுமிடத்து அங்கே சிலவேளைகளில் தளம்பல் நிலையும், மிகைப்படுத் தலும் புகுந்துவிடும். ஆனால் சமூகம் அதனைப் பதிவு செய்யு மிடத்து கண்ணாடியில் விம்பம் போல எவ்வித அளவுப் பரிமாண மாற்றமும் அற்ற பிரதிபலிப்பாக இருக்கும். அப்படிப் பார்க்கையில் இங்கே தங்கள் நினைவலைகளைப் பதிவு செய்ததன் மூலம் எங்கள் தந்தையின் மீது நமக்கிருந்த பாசம், மரியாதையைக் கடந்து அவர் மீது ஓர் பக்தியுணர்வை ஏற்படுத்தும் அளவிற்கு நம்மை இட்டுச் சென்றுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தருணத்தில் எமது தந்தையாரின் நினைவுகளை இம்மலரின் ஊடாகவும், விழா அரங்கிலும், தொலைபேசி யூடாகவும், மின்னஞ்சல் ஊடாகவும் பதிவு செய்த பெருந்தகை களிற்கும் குறிப்பாக புலம்பெயர் தேசத்தில் முதன்முதலாக உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, பெண்கள் கல்லூரி பழைய மாணவர் சங்க சுவிஷ் கிளையால் நடத்தப்படும் ''வானவில்'' கலைவிழாவில் இரு முறை மனித நேயத்துடன் எங்கள் தந்தையாரை நினைவு கூர்ந்து கௌரவப்படுத்தி யமைக்கும், இம்மனையை எம்மிடம் மீளளித்த திரு.திருமதி சாந்தகுமார் குடும்பத்திற்கும் இன்று (17.012013) சுவிஸ் கிளையால் நடாத்தப்படும் சேவை நயப்பு விழாவில் இந் நன்கொடை கையளிப்பு வைபவத்தையும் கௌரவித்து சிறப்புச் சேர்த்தமைக்கும், சுவிஸ் கிளையில் நானும் ஓர் உறுப்பினன் என்ற வகையில் இவ்விழாவை நடாத்துவதற்கு சுவிஸ்கிளை சார்பாக அனைத்துப் பணிகளையும் திறம்படவும், நேர்த்தி யாகவும், முழுமனதுடன் செய்த திரு.சி.கணபதிப்பிள்ளை (கணா மாஸ்டர்) அவர்களிற்கும் அன்னார்களின் குடும்பம் சார்பாக சிரந்தாழ்த்திய நன்றிகளும் உரித்தாகுக.

முன்னாள் அதிபர் திரு. தர்மலிங்கம் அவர்களின் ஒத்துழைப்புடன் எங்கள் பெற்றோரின் அறக்கட்டளை சார்பாக என்னால் இயன்ற கல்விசார்ந்த சிறு பங்களிப்பைச் செய்ததுபோல் இறைவன் அருளால் புறச்சூழல் இசையும் பட்சத்தில் தற்போதைய அதிபர் திரு. கிருஷ்ணகுமார் அவர்களின் ஒத்துழைப்புடனும் தொடர எண்ணியுள்ளேன்.

நன்றி.

**வே. ஞானேஸ்வரன்**
**மகன்**

**அன்பும் அறனும் உடைத்தாயின்**
**இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு?

எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாகுவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள்
அது வேறொருவருடையதாகும்.

" இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும் "

~ பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ~

Fast Printers : 289-1/2, Galle Road, Colombo - 06 T.P-0112362312.
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org